தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 12.] MADRAS:—SUNDAY MARCH, 20, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

நவீனசாஸ்திரம்.	சந்தியாவந்தனம்.
ஆன்மாவும் சரீரமும்.	வர்த்தமானசங்கிரகம்.
இந்துசமயசாரவிளக்கம்.	நோட்டீசு.

நவீனசாஸ்திரம்.

இப்படிப்பட்ட உபயோகமான சாஸ்திரவிர்த்தியினுலே புதுபுதுவஸ்துகள் இடைவிடாது கண்டுபிடிக்கப்படுகின்றன. ஒரு வஸ்துவை உபயோகிக்கலாமென்று நாம் யோசித்துக்கொண்டிருக்கும்போதே அதைப்பார்க்கினும் சீரான வேறொரு வஸ்து அதற்கு பர்த்தியாக வருகிறது. ஓர்காலத்தில் வியர்த்தமானதென்று எண்ணப்பட்டிருந்த வஸ்து இக்காலத்தில எவ்வளவோ உபயோகப்பட்டுவருகிறது. நெல்லூரில் கொஞ்சகாலத்திற்குமுன்னமே முருங்கைக்காய்களை மாட்டுக்குப் போட்டுவந்தார்கள்; தென்தேசத்தார் சிலர் அவ்வூர்போய்ச் சேர்ந்தபின்பு மனிதருக்கு உபயோகமானவையென்று தெரிந்தெடுத்துக்கொண்டார்கள். இப்போது வாள்தூளினது உபயோகம் மிகுதி. சில வருஷங்களுக்கு முன்னமே ஒரு வெள்ளாட்டுத் தோல் கால் ரூபாயும் ஒரு செம்மறியாட்டுத் தோல் நான்கு தம்மிடியும் விற்றது. ஐரோப்பியர்கள் அதைப் பலவாறு உபயோகப்படுத்தத் தெளிந்தமையால் ஒரு செம்மறியாட்டுத் தோல் முக்கால்ரூபாய் ஒரு ரூபாயும் விற்கிறது. மனிதர்கள் புத்திநுட்பத்தால் கண்டறிந்த மின்சாரம் "காஸ்" வாயு, தைலமுதலிய பலவஸ்துக்களின் பிரயோசனத்தை நாம் அறிந்தேயிருக்கிறோம். புதுபுது வஸ்துக்களையும் அவற்றாலாகும் உருவங்களையும் கண்டுபிடிக்காவிடில் உலக வாழ்க்கை சீராய் நடப்பது துர்லபமே. உண்மையான வைரக்கல் செய்யப்படக்கூடுமென்று பலமுறை சொல்லப்பட்டிருந்தது; அதுவிஷயத்தில் எடிம்பரோபட்டணத்திலே இப்போதுதான செய்து பார்த்த பரிசோதனையினால் அப்படிப்பட்ட ஆலோசனை மனப்பிராந்தியல்லவென்று தெரியவருகிறது. இது நிறைவேறின், வைரக்கற்கள் விலையுயர்ந்த பொருளாக மதிக்கப்படுவதொழிந்து, கடையிலுள்ள பூண்டுக்குச்சமானமாய்விடும். இப்படிப்பட்ட மகத்தான பிரயோசனமும் மானிடவிவேகவிசேஷத்தினலல்லவா!

ஆன்மாவும் சரீரமும்.

மீண்டும் சென்றமதி நமது நண்பர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசசாஸ்திரியார் அவர்கள் பரிகாசாஸ்திரம் வீணவார்த்தைமுதலிய யாதொன்றும் மருந்திற்குங் கிடைக்கவொட்டாமலெழுதிய சமாதானப்போலிகட்கு யாமெழுதும் மறுமொழி யாதெனின் கூறுவாம்.

சாஸ்திரியார்கூற்று.

"இவர் திருவாக்கின் பலத்தால் அவ்வியாப்தி அதிவியாப்தி இரண்டிலும் வியாப்தி யென்ற சொல்லிருததலால், இரண்டும் வியாப்தியா தங்கால், அசத்து சத்து அதிசத்து இம்மூன்றும் சத்தும், அயோக்கியம் யோக்கியம் இவ்விரண்டும் யோக்கியம் என்றும்........பகுத்தறிவுடையவர் வழங்குவதாய் ஏற்படினும், அவ்வளகப் பகுத்தறிவு தற்காலம் நமது நண்பரிடமே கண்டோம்" என்கின்றார்.

விடை.

அறிவாலமைந்த விவேகிகளே! அதிவியாப்திதோஷம் அவ்வியாப்திதோஷம் என்னப்பட்ட தோஷங்களிரண்டினையுஞ் சொற்சுருங்கக் கூறவேண்டில் வியாப்திதோஷம் என்று கூறலாகுமென்றேமேயல்லாமல் வியாப்தி யெனக் கூறலாகுமென்றிலம். இதனை இன்னொருக்கால் பத்திரிகையிற் பார்த்துச் சந்தேக நிவர்த்தி செய்துகொள்ளலாம். இப்படியே அசத்து சத்து அதிசத்து இம்மூன்றையும் சத்தத்திரையம் என்றும, யோக்கியம் அயோக்கியம் என்பதை யோக்கியதாத்துவயம் என்றும் கூறுதலேன் தகாது? மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்பனவற்றைச் சொற்சுருக்கமாய் மூவாசையென்று தமிழிலும் ஈஷணாத்திரயம் என்று சமஸ்கிரதத்திலும் கூறுகின்றிலரா? (முற்பவப் பகைபிற்பவப் பகை இவ்விரண்டும் ஒழியும்) என்னுங் கருத்தை யமைத்து நூலாசிரியர் "ஒழித்திடும் பவப் பகை" என்று கூறிலரா? பாருங்கள் பாருங்கள். ஆதலால் இனியேனும் நமது நண்பர் எவரும் பாஷாவாதப் பாறையில் தலைமுட்டாரெனப் பிரார்த்திக்கின்றோம்.

சாஸ்திரியார்கூற்று.

"நாம் ஒருதேசமாவது நாத்திகர் நிறைந்தது இல்லை யென்று (எழுதியதைக்கண்டு அதனால் நாத்திகருக்கு வருங்குறையாது என்று நமது நண்பர் கேட்டதற்கு யாம் (தேசங்கள் க்ஷேமமடைவது மதங்களின் பிரயோசனங்களில் ஒன்று) என்று முதல் பத்திரிகையிலேயே விரித்தாமாகையால் ஒருதேசம் முழுவதும் நாத்திகம் நிறைந்தால் அங்கு உலகக்ஷேமங் குறையுமென்பது கருத்தாம்)" என்றார்.

விடை.

பகுத்தறிவுடைய புத்திமான்களே! ஒரு தேசமாவது நாத்திகர் நிறைந்தது இல்லை என்று நமது நண்பர் கூறியதில, நாத்திகர் வெகு சொற்பமெனப் பொருள் விளங்குவதால், நாம் அதனாலே நாத்திகருக்கு வருங்குறையாது என்றோம். இங்ஙனம் கேட்ட வினாவிற்கு அவர் "தேசங்கள் க்ஷேமமடைவது மதங்களின் பிரயோசனங்களில் ஒன்று" எனப் பொருந்தாத உத்தரமளித்தனர். நாம் மனிதரைச் சுட்டிக் கேட்ட கேள்விக்கு தேசத்தைச் சுட்டிக்காட்டுவது விடையாமா? மிடில் இஸ்கூல் பரீக்ஷைக்குப் படிக்கும் வித்தியார்த்திகளும் மனிதரைச் சுட்டிக்கேட்ட கேள்விக்கு இடத்தைச் சுட்டி விடைபகராரே என்றோம். இதற்கு நமது நண்பர் "ஒரு தேசம் முழுவதும் நாத்திகம் நிறைந்தால் அங்கு உலகக்ஷேமம் குறையுமென்பது கருத்து" என்று கூறுகின்றார். இவர் கருத்து இவரது சொற்களால் பிறர்க்கு விளங்கவேண்டுமேயல்லாமல் வேறல்லவாதலால் இவர் "ஒரு தேசமாவது நாத்திகர் நிறைந்தது இல்லை" என்ற வாக்கியத்தில் தேசம் என்பதற்கு என்ன பொருள் கொண்டார்? இடத்தையா ஜனங்களையா? இடத்தையேயாதலால், அதற்குத் தக்க விடைதராமல், அதை யடுத்த வாக்கியத்தில் இவர் "தேசங்கள் க்ஷேமமடைவது மதங்களின் பிரயோசனங்களில் ஒன்று" எனத் தேசமென்பது ஆகுபெயராய்த் தேசத்தாரெனப் பொருள் தரத்தக்க வாக்கியத்தைப் பிரயோகித்து, முன்னதை விட்டுப் பின்னதைமேற்கொண்டு, "உலகம்" என்பது இடத்தையும் உயிர்களையும் குறிக்கும் பதம் என்று தொல்காப்பியரையும் பரிமேலழகரையும் திருவள்ளுவரையும் மேற்கோள் காட்டுவதேன்? [தேசமென்பதை யாம் இடவாகுபெயரொன்னுமல் சும்மா ஆகுபெயரென்றது குற்றமென இனிவாதிப்பார்போலும்.] விஷயத்தைவிட்டுச் சொற்களைப் பிடித்துக்கொண்டு வீண் வாதஞ் செயவதினலே பிரயோஜனமொன்றுமில்லை.

சாஸ்திரியார்கூற்று.

"இவர் ஒற்றுமை என்பது பலர் ஒன்றுபட்டு (பொதுவாய் சுகதுக்கங்களை அனுபவிப்பதன்றி,) வேறு யாதென வெண்ணினரோ அறிகிலேம்" என்கின்றார்.

விடை.

ஒற்றுமை என்பது ஒன்றாந் தன்மை. சகலரும் ஜாதி சமயாதி வேறுபாடின்றி ஒன்றுபட்டுப் பொதுவாய் சுகதுக்கங்களை அனுபவிப்பதவே ஒற்றுமை என்பதற்கு நாம் கொண்ட பொருள். ஜாதிவேறுபாடு சமயவேறுபாடு உண்டானவிடத்து ஒற்றுமை ஒருக்காலும் சித்திக்காது. சமயப்பன்மை ஜாதிப்பன்மை யுள்ளவிடத்து ஒன்றாந்தன்மை எங்கு சித்திக்கும்? சைவர் சமணர் வைணவர் மகமதியர் கிறீஸ்தவர் முதலியவர்கள் அவ்வவர்க்ள்மட்டில் குழுக்குழுவாக ஒன்றுபட்டிலரோவெ

,னின் அப்படிப் பல குழுவினருள்ளமையால அக்குழுவினர் ஒன்ருந்தன்மையடையார்.

விவேகிகளே, மூளையென்பது மனத்திற்கு ஸ்தானந்தான் என்றும் அதற்கு அறியுந்தன்மையில்லையென்றும் சாஸ்திரியார் கூற, அதனமேல் மனம் என்பதுதான் யாது என்று யாம் வினவ; அது அறிவின் தெளிவென்றும், அறிவுயாதெனில், அது புலனுணர்ச்சியென்றும்; புலன்கள் யாவெனின் அவைகருவிகள் என்றும், கூறிவந்த நமது நண்பராகிய சாஸ்திரியாரவர்களைநோக்கி, நாம் மனத்திற்கு இலக்கணம் என்னையென்று கேட்டால்; அதற்கு அறிவின்தெளிவென்பது முதலிய பிரதிபதங்களைக்கூறிவந்தார். இதனைநோக்கி நாம், இவரைக்கேட்பவற்றிற்கெல்லாம் இலக்கணம் கூருமல் பிரதிபதங்கூறி விலகிப்போகின்ருரோ என்றேமே யொழிய வேறல்ல. கொள்கை வேறுபட்ட இருவரில் ஒருவரது கேள்விக்கு ஒருவர் நேர்விடை கொடுக்காமல எட்டப்போய்விட்டால் விவகாரம் எங்ஙனம் சிக்கறும்! வீட்டின் இலக்கணம் என்னைஎன்றகேள்விக்கு மனை என்பது தானுவிடை? இங்ஙனம் நாமொன்று கேட்கத்தாமொன்று கூறிவந்தாரோ; இதனுலேனும் "மனம்" பிரத்தியேகப்போருள் என்று ஏற்படுகின்றதா பார்ப்போம். நமது நண்பர் மேலே சொல்லிய பிரதிபதங்களைக் கூட்டிப் பொருள்படுத்துங்கால் "மனமென்பது கருவிகளின் உணர்ச்சியின் தெளிவே" யென்ருகின்றது. ஆகவே உணர்ச்சி அக்கருவிகளா? அல்லது அக்கருவிகளைக் கதுவிய பிற பொருள்கள்தாமாமா? ஆகா. ஆதலால் உணாச்சி அக்கருவிகளும் அவற்றைக் கதுவிய பிறபொருள்களு மாகாமல் அவற்றின் தன்மையேயாம். அத்தன்மை அல்லது "அத்தன்மையின் தெளிவு" யாண்டும் பிரத்தியேகமாய் நிகழ்தல் காணுமாதலால் "உணர்ச்சியின் தெளிவாகிய மனம்" பிரத்தியேகப் பொருளென்று காட்டப்படவில்லை.

சாஸ்திரியார்கூற்று.

"கடவுளின்மை குறித்து நாம் பார்த்துவரும் சுமார் 4ஞ பத்திரிகைக்குள் எழுதினுர் இல்லையாதலால் அவசியம் எழுதவாரோல் அப்புஸ்தகங்களி லுள்ள நியாயங்களால் கண்டிக்கும்பொழுது அவை வெளிசகு வரக்கூடியவையாகும்."

விடை.

கடவுள் என்னும் சொல்லிற்கு இதுகாறும் நிராக்ஷேபமாகிய இலக்கணம் கூறினுர் ஒருவரும் இல்லையாதலால், அச்சொல்லிற்கு எமக்கும் பொருள் தோன்றவில்லை. எமக்குப் பொருள்படாத ஒன்றைப்பற்றி அஃது இல்லையென்று நாம் எப்படி எழுதுவோம். ஆதலால் நாம் எழுதப்போகிறதுமில்லை, அதைச்சுட்டி இவர்நூல்களின் நியாயம் வெளிக்குவரப்போகிறது மில்லை. இவரோ அந்நூல்களின் ஆதாரங்களால் கடவுளை நிலைநாட்டுவாரோல் அவறறின் நியாயா நியாயங்களைப் பார்ப்போம்.

பகுத்தறிவுடைய நண்பர்களே;

நமது நண்பர் ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரியாரவர்கள் மனத்தின் இலக்கணம் சொல்லத் தமக்குத் தெரியாது என்று ஸ்பஷ்டமாய் சொல்லிவிடின், பின் மனத்தின இலக்கணம் இதுவென்று சொல்லி, பின்பு அம்மனம சிலகாலம்வரையில் குழந்தைக்கு இல்லையென்றும் அக்காலத்தில் ஜீவன்மாத்திரம்உண்டு என்றும் ஸ்பஷ்டமாய்க்காட்டச்சித்தமாகவேயிருக்கின்ருேம்.

நமது நண்பர் முன்னம் ஆன்மாவென்பது இதுவென்று அதன் லக்ஷணத்தைக் கூறியலலவா அவ்விலக்கணி இன்னவிடத்திலுண்டு என்று காட்டுதல்வேண்டும்? அங்ஙனம, செய்யாமல் பெயர்மாத்திரையில் ஆன்மாவென்று கூறி இங்குண்டு அங்கில்லை என்று சொல்லுதல் முயற்கொம்பை முழம்போட்டேனென்பது போலல்லவா விருக்கின்றது. நாம் கேட்டதொன்றிருக்க, நமது நண்பர் இனியேனும் மந்தமதிகள் மலைவெய்தும்படி வேருென றுகூறிவருதலாகிய சொற்சாலங் காட்டாமல் கேட்ட கேள்விக்கு அஞ்சாமல் தக்கவிடை கொடுத்து தமது பத்திரிகையையும் கீர்த்தியையும் பரிமளிக்கச் செய்வாரெனக் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

இந்துசமயசாரவிளக்கம்.

பிரமப்பிரளயம்.

(43-வது பக்கத்தொடர்ச்சி.)

நவீன சாஸ்திரிகள் கூறும் பிரபஞ்ச தத்துவங்களை நாம் அறிவதற்குமுன்னமே நம்முன்னோர்கள் கூறியிருப்பனவற்றை ஆராய்வது அத்தியாவசியகம்.—விநாயகபுராணத்திலே திரிமூர்த்திகள் வரம்பெற்ற படலத்தின் பிரதமத்தில் பிரபஞ்சம்உருவழிந்து ஒடுங்குவதையும் மறுபடி விர்த்தியாவதையும்பற்றிச் சொல்லியிருக்கிறது. அதாவது.—(1) பூர்வத்தில் ஒரு பிரமப் பிரளயமுண்டானபோது, பன்னிரண்டு சூரியர்களும் உதயமாய் நூறுவருடம் மழையில்லாமல் எரித்து, சகத்துக்களையெல்லாம் பஸ்பஞ்செய்து, பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிற ஆதிசேஷனுடைய பணுமகுடங்களைத் தகிக்க, அவனுடைய முகங்களினின்றுங் காளகூட விஷாக்கினி பிறந்து, அந்த அக்கினியும் சூரியாக்கினியும் ஒன்ருகக்கூடி, ஆதிசேடன்முதல் பன்னிரண்டு சூரியர்களையும் எரித்து நீருக்கி, அவ்வாறு நீருக்கிய அக்கினிகளினின்றும் சத்தமேகங்கள் பிறந்து நூறுவருடபரியந்தம் மகத்தான பெருமழைபெய்து, அந்தஜலமும் பூமிபஸ்பமும் ஒன்ருகக்கலந்து வாயுஸ்தம்பமாய் நிற்க, அதினின்றும வடவாமுகாக்கினிபிறந்து ஜலத்தையெல்லாம் கிரகிந்தது. பின்னர் அவ்வடவாக்கினி பிரசண்ட வாயுவி லொடுங்க, அவ்வாயு ஆகாயத்திலொடுங்கி, ஆகாயம் ஆத்மாவி லொடுங்கி ஆத்மா பிரமாவி லொடுங்கி, பிரமா விண்டுவி லொடுங்கி, விண்டு உருத்திரனி லொடுங்கி, உருத்திரன் மகேச்சுரனி லொடுங்கி, மகேச்சுரன் சதாசிவனி லொடுங்கி, சதாசிவன் விந்துவிலொடுங்கி, விந்து நாதத்திலொடுங்கி, நாதஞ் சத்தியிலொடுங்கி, சத்தி சிவத்திலொடுங்கி, சிவம் பரத்திலொடுங்கி, பரம் பராபரத்திலொடுங்கியது. அப்பராபரமொன்றுமே எல்லாங்கடந்த தத்துவமுடிவிலே பரப்பிரம சொரூபமாகியிருந்தது.

(1) நண்பர்களே, இந்தமட்டில் பரியாலோசிப்போம். இதில் ஏதோ ஒரு பிரளயத்தில் நடந்த சங்கதியைத் சொல்லியிருப்பதாகத் தெரியவருகிறதேயல்லாமல், இதற்கு முந்திய பிரளயத்தின் சங்கதியாகக் காணவில்லை. அதுவரையில் மற்றைப்பதினெரு சூரியர்களும் தங்கள் ஒளியை அடக்கிக்கொண்டு எங்கே மறைந்திருந்தார்களோ? சகத்துகளை பஸ்பஞ்செய்வதற்கு நூறுவருஷகாலமும், மழையினல் தீயை அவிக்க நூறு வருஷகாலமும் சென்றதாம். விநாயகர் அண்டாண்ட பிரமாண்டங்களையெல்லாம் நினைத்தமாத்திரத்தில் அழிக்கத்தக்க நெற்றிக்கண் ணுடையவரென்று விநாயக புராணத்தில் வேருேரிடத்தில் சொல்லியிருக்கிறது. அவர் தன் சித்தத்தின்படித்தானே அப்பிரளயத்தை அனுப்பியிருக்கவேண்டும்? பிரளயத்தினு நெடுங்காலம் வதைத்ததைப்பார்க்கினும் ஒருநொடியில் எரித்துப்போடுவது சுகுணமாமே. இப்படிப்பட்டவர்தான் பிரளய முடிவுவரையில் ஆன்மகோடிகளை இளைப்பாறத் தன்னுடைய கர்ப்பத்தில் வைத்திருந்தனராம். இவர் செய்த கொடுமையையும் பின்பிவருக்குண்டாகிய சொற்ப அருளையும் நாம் சற்றே யோசிக்கவேண்டும். பீபில்ஸ்பார்க்கிலுண்டான தீ தற்செயலாய் நேரிடாமல், ஒருவனல் மூட்டப்பட்டதாகத் தெரியவருமாகில், அவனை நாம் என்னென்று நினைப்போம்? புராணிகனுடைய கற்பனை கதையாயிராமல், சகத்துகளையெல்லாம் நீருக்குவித்த ஒருசண்டாளன் உண்மையாயிருப்பானுகில், அவனை நாம் கடவுளென்று சொல்லுவோமா? அவன் அப்படிச் சுட்டெரித்ததுயாது பிரயோசனத்தைக் கருதி? பூர்வ கன்மமாவது ஒழிந்ததா, இல்லை. (இது சங்கதி பின்னுல்வரும்.) கிரிஸ்துமார்க்கத்திலே, உலகத்தில் பாவம் நிறைந்துவிட, கடவுள் பொறுக்காதவராய், நீதிமானுகிய நோவா என்பவனும் அவனுடைய குடும்பத்தாருமாகிய ஆக எட்டுப்பெயரை ஓர் பேழையில் காப்பாற்றி, மற்றவர்களை சலப் பிரளயத்தினுலழித்து அதுவரையிலுள்ள பாபத்தை ஒழித்தாரென்றும், பின்பு உண்டான பாவங்களை 1886 வருஷத்துக்கு முன்னமே ஏசுக்கிரிஸ்து அவதாரஞ் செய்து தன்னுடைய ரத்தத்தினுலே கழுவிப்போட்டாரென்றும் சொல்லியிருக்கிறது. இதனுலே அதுவரையிலுண்டானபாவமாவது ஒழிந்தது. கிரிஸ்துமார்க்கத்தில் சிருஷ்டிப்பு தொடங்கி உலகத்தின் வயசு ஆறுயிரம் வருஷமாம். அதற்குள் பாவபரிகாரத்துக்கு இரண்டுதரம் முயற்சிசெய்துண்டான அனுபவத்தினுல அக்கடவுள் இனி என்னசெய்வாரோ தெரியவில்லை. ஆயினும் இக்காலத்து மனிதர்கள் அக்காலத்து மடையர்களாயிரார்களாதலால், இவர்களே பிரபஞ்சதத்துவங்களைய

ராய்ந்தறிந்து சாஸ்திரங்களேற்படுத்திக்கொண்டு, உண்மையை புணர்ந்து சீராயொழுகும்படி விட்டுவிடுவார் போலும். இந்துக்கள் சொலலுகிற சிருஷ்டிகாலம் அப்படிக்கல்ல. அழித்தழித்து சிருஷ்டிசெய்து செய்து எத்தனேயோகற்பங்கள் தோன்றித் தோன்றி மறைந்தன. இவ்வளவு அனுபவமிருந்தும், பழய மலங்களைப் போக்கி ஆன்மாக்களை நிர்மலமாக்கி, அடிக்கடி படைத்தல் அழித்தலாகிய தனது வீணான தொழிலை நிவர்த்திசெய்துகொள்ள வகைதெரியாத அஞ்ஞான சொரூபியும் ஒருகடவுளோ? ஒருவேளை அவர் இப்படி திருவிளையாடல் புரிந்துகொண்டு ஆனந்தித்துக்கொண்டிருக்கிருராக்கும். இது నీకు వక మాట నాకు వక మూట (நீகு ஒக மாட்ட நாகு ஒக மூட்ட) என்பதுபோலத்தான். ஒரு சிறுபிள்ளையும் ஈயைப்பிடித்துப் பிதுக்கி ஒரு துண்டு நூலை இணைத்துப்பறக்கவிட்டுப் பார்த்து ஆனந்தித்துக்கொண்டுதானிருக்கிருன். மானிடர்களை சிருஷ்டித்து, கன்மபாசங்களைத் தொடுத்து இவ்வுலகத்தில் வருத்துவதுமல்லாமல, நரகாக்கினியிலும் விழ்த்தி, (சுடுகாட்டில் வெட்டியான் பிரேதங்களைப் பொசிக்கினுல்) இவர் ஆன்மாக்களைப் பொசுக்கி, நரமாமிசபக்ஷணியும் வெறுக்கத்தக்க சண்டாள தொழில் புரிவதைப்பார்க்கிலும், “வேலையிலாவேதன்” என்று தாயுமானவர் சொன்னபடி வேலைவேண்டுமானுல்,சமுத்திரசலத்தை இறை கூடையால் இறைத்துக்கொண்டும், அதை மறுபடி துத்தும், பள்ளம் வெட்டிச் சமுத்திரமாக்கியும், மலைகளையும் பூமியையும் சம்மட்டியால் தகர்த்துத் தூசாக்கி ஓரிடத்திலெடுத்துப் போட்டுக் கொண்டும், இவ்வாறு அளவிலாக்காலம் குற்றமற்ற வேலை செய்துகொண்டிருக்கலாமே. கருணாநிதியாகிய கடவுளென்பவரொருவரிருந்தால், அவர் எள்ளளவேனும் உபத்திரவமான காரியஞ் செய்யத்தகக மூடனுயிருக்க மாட்டார். தானறியாத பொருளொன்றைக் கற்பித்து மூடசனங்கள் கேட்டுச் சந்தோஷித்துத் தன்னை வியந்து பெருமை பாராட்டும்படி, தான் அரிய தவஞ் செய்து உம்பருலகிற் சென்று உபதேசம்பெற்றுத் தெரிந்துவந்ததாக (மகம்மது செய்ததுபோல) நடித்து சில வீணான கதைகளைக் கட்டினவனே பெரிய மூடன்.

சூரிய வெப்பத்தினுலே கடல் ஏரி குளம் குட்டை முதலியவற்றினின்று எழும்பும் நீராவிகள் கடித்து மேகக்கூட்டங்களாய் மறுபடி கரைந்து மழையாகவும் பனியாகவும் பூமியின்கண் விழுகின்றனவென்று சிறுவர்கள் வாசிக்கும் பாட புஸ்தகங்களிலும் காணலாம். அந்தப்படி பன்னிரண்டு சூரியர்கள் வெப்பத்தினுல் பன்னிரண்டு பங்கு அதிகமாக ஆவியெழும்பி மழையும்பனியும் பெய்யவேண்டியதாயிருக்க, நூறுவருஷகாலம் மழையில்லாமற்போனதிருக்கட்டும்; நீராவி மேகமாவதொழிந்து, பிரத்தியேகமாய், சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம், என்னும் சப்தமேகங்களிருப்பதாகவும், அவை தேவேந்திரனுடைய ஆக்கினைக்குளடங்கினதாகவும் சொல்லுவது இந்துக்களுடைய சித்தாந்தம். மேலே அவ்வாறு நீருக்கிய அக்கினிகளினின்றும் சத்தமேகங்கள் பிறந்தனவென்றமையால், அந்தக் கற்பமுடிவுக்கு முந்தி மேகங்களும் மழையுமே யில்லையோ, அல்லது நீருப்ப்போன மேகங்கள் மறுபடி உற்பத்தியாயினவோ?—பூமி உருண்டை வடிவாய்ச்சுற்றிக்கொண்டிருக்கிறதென்பதை சர்வத்திர சாதாரணமாய் அறிந்து நம்பிக்கையுண்டாயிருக்க, அதை ஆதிசேஷன் தாங்கிக்கொண்டிருக்கிருனென்கிற பிரமையின்னும் விடவில்லை.—ஜலமும் பூமி பஸ்பமும் ஒன்ருய்க்கலந்து நின்ற வாயுஸ்தம்பத்தி லிருந்து வடவாமுகாக்கினி பிறந்து ஜலத்தையெல்லாம் கிரகித்துக்கொண்டு, அவ்வடவாக்கினி பிரசண்ட வாயுவிலும், அவ்வாயு ஆகாயத்திலும், இவ்வாருக ஒன்று மற்ருென்றிலொடுங்கி, முடிவில் பராபரமொன்றுமே நிலைத்ததாம். இதில் வடவாக்கினி வாயு ஸ்தம்பத்திலிருந்த ஜலத்தைக் கிரகித்துக்கொண்டபின்பு, அந்தஸ்தம்பத்தில் மிகுதியாகநின்ற பூமிபஸ்பம் ஒன்றிலும் ஒடுங்கக் காணேம். மறுபடி சிருஷ்டிக்கு ஒரு வஸ்துவேண்டுமாதலால் அதற்காக அந்த பஸ்பம நிறுத்திக்கொள்ளப்பட்டதுபோலும்!—கற்பமுடிவில் வடவாமுகாக்கினி பிறந்ததென்ருல், அதற்குமுன் அந்த அக்கினியில்லை போலும்; சமுத்திரத்தின் மத்தியில் வடவாக்கினி நின்றுகரையில்லாத ஜலத்தைப் புரளவொட்டாமல் இழுத்துக்கொண்டிருக்கிறதென்கிற சித்தாந்தத்தை நம்பித் தாயுமானவரும் “அக்கடலின்மீது வடவனல் நிற்கவில்லையோ” வென்று கூறியிருப்பதினுல்,இப்போது மிருப்பதாக விளங்குகிறது.—ஆகயவெளி ஆக்மாவிலொடுங்கிவிட்டதென்ருல், ஆக்மா, பிரமா, விண்டு முதலான தேவதைகளிருப்பதற்கிடமில்லையாதலால், வெளி நித்தியமும் அநாதியுமாகவே யிருக்கவேண்டும். காலமும் அவ்வாறுதான். மேற்படி தத்துவங்களை யோசிப்போமாகில், ஒரு வஸ்து மற்ருென்றிலொடுங்கிற்றென்பதினுலே, எதுவும் சுத்தமாயழிந்து இன்மையாய்ப்போகாமல் ரூபம் மாறிபாயினும் நித்தியமாயிருக்கிறதென்று விளங்குகிறது.

A. M. (இன்னும்வரும்.)

———o———

சந்தியாவந்தனம்·

(44-வது பக்கத் தொடர்ச்சி.)

காயத்திரி.

ఓం - తత్సవితుర్వరేణ్యం, భర్గోదేవస్యధీమహి, ధియోయోనః ప్రచోదయాత్.

ஓம் * தத்ஸ விதுர்வரேண்யம், பர்கோ தேவஸ்ய தீமஹி, தியோ யோன: ப்ரசோ தயாத்.

சூரியனுக்கும், சிவனுக்கும், அத்வைத விசிட்டாத்வைத மதங்களுக்கும், பரப்பிரம்மத்திற்கும் பொருளாகும்படி உச எழுத்துடைய இக்காயத்ரிக்கு உரை செய்வார்கள்.

இ-பொ—1. சூரியன் ஆகாய விரிவில் ஓர் மணிபோல் பிரகாசித்துக்கொண்டு உதயாஸ்தமன மென்னும் பூலோக யாத்திரை புரிபவராக இருப்பதால் அவரைக் கடவுளென்றும், சர்வஜன சுக ஏதுவான மழைக்கு முக்கியகாரணராக இருப்பதால் சவிதையென்றும், பெயர்பெற்று துர்க்கிரியையைப் பகைத்து நற்கிரியையே புரியும்படி நமது புத்தியை தூண்டுகிறவரும், இருளைப் போக்கடித்து பிரகாசிக்கும்படி செய்கிறவரு மான பிரகாசம்பொருந்திய சூரியனை தியானிக்கிறேன்.

2. அஞ்ஞான மெனுங் கடலினின்று ஞான மெனுங் கரையேற்றுபவரும், சூரியமண்டல மத்தியில் சஞ்சரிப்பவரும், பிராமணரின் சிரேஷ்டமான தேவதையாக இருப்பவருமான சிவபெருமானை தியாணிக்கிறேன்.

3. அகண்டாகாரமான பேரின்பமும், ஜகத்திற்கு உபாதான காரணமும், சம்பூரண சோதியும், அந்தக்கரணத்தில் தத்தர்மாபாசகமான சாக்ஷியும், பிம்பத்தை ஸ்தானமாகக் கொண்டிருக்கும் சாக்ஷிரூபமாகிய பரப்பிரம்மத்தை தியாணிக்கிறேன்.

4. பிராணவாயு உள்ளது மில்லது மாகிய ஸமஸ்த இருவகைத் தோற்றங்களாய் ஜகத் கிரீடையினுல் ஆநந்தித்து சூரியமண்டல மத்தியில் சஞ்சரிப்பவரும், தேஜோமயரு மானவருமாகிய விஷ்ணுவை தியாணிக்கிறேன். அப்புருஷ உத்தமர் எத்தன்மையரெனின்:—ஹானோபாதானுதி விஷயங்களானஞானங்களை பிரகாசிப்பிக்கிறவர்.

காயத்ரியின் முடி.

ఓమాపోజ్యోతీరసోమృతంబ్రహ్మభూర్భువస్సువరోమ్.

ஓமாபோ ஜ்யோதீ ரஸோம்ருதம் பிரம்ஹ பூர் புவஸ் ஸுவரோம்.

இ-பொ.—1. ஜலம் தேஜசு அறுசுவை அவிர்ப்பாகம் சாமவேதம் பூமண்டலமுதலிய ஸப்த உலோகங்களாகிய இவை அனைத்திற்கும் கடவுளே மூலபாத்தியராக இருப்பதால் அவ்வனைத்தும் பிரம்மத்தில ஐக்கியம். பிரம்மம் ஓமென்னும் பிரணவத்தில் ஐக்கியமாகையால், அப்பிரணவமே பிரம்மமெனப்படும்.

2. ஜலம் தேஜசு மற்ற பூதசத்துவங்களும் ஸப்த ஸ்பரிசரூப ரஸ கந்தங்களும், காலம்பிரகிருதி (கடவுள் ஆளுகை செல்லுமிடம்) பூர் புவ சுவர்லோகங்களும், மற்ற ச லோகங்களும் பாமாத்மாவின் செயலாக இருக்கின்றன. மந்திரத்தின் முத

* இவ்விடத்தில் பூர்-புவ-சுவஹ என்னும் மொழிகளைச் சேர்த்துப்படிக்கவும்.

விலும் இறுதியிலும் ஓம என்னும் மொழியைக்கூட்டி உச்சரிப்பதினால் அதில் தோற்ற ஒடுக்கங்கள் அடங்கி இருக்கிறதென்பது பொருள்.

காயத்ரியின் அடி.

పరోరజసేసావదోమ్.

பரோ ரஜஸே ஸாவதோம்.

இ-பொ.—சாத்துவித இராசத தாமத குணங்களுடைய பிருகிருதியிலும் அதீத (மேற்பட்ட) ரும் ஓம் என்னும் பிரணவத்தில் சொல்லப்பட்டவருமான பரமாத்மா எனக்கு சுகத்தைத் தரக்கடவது.

శ్రౌతాచమనంకృత్వా ప్రాణానాయమ్యపూర్వోక్త ...ప్రీత్యర్థం...సన్ధ్యాఙ్గం యథాశక్తి గాయత్రీ జపం కరిష్యే.

ஸ்ரௌதாசமனம் க்ருத்வா ப்ராணாயம்ய பூர்வோக்த... ப்ரீதியர்த்தம்...ஸந்தியாங்கம் யதாஸக்தி காயத்ரீ ஜபம் கரிஷ்யே.

కరన్యాసః.—తత్సవితురఙ్గుష్ఠాభ్యాంనమః, వరేణ్యం తర్జనీభ్యాంనమః, భర్గోదేవస్యమధ్యమాభ్యాంనమః, ధీమహి అనామికాభ్యాంనమః, ధియోయోనఃకనిష్ఠికాభ్యాంనమః, ప్రచోదయాత్కరతలకరపృష్ఠాభ్యాంనమః.

హృదయన్యాసః.—తత్సవితుర్బ్రహ్మాత్మనే హృదయాయనమః, వరేణ్యంవిష్ణ్వాత్మనేశిరసేస్వాహా, భర్గోదేవస్యరుద్రాత్మనే శిఖాయైవషట్, ధీమహిసత్యాత్మనే శ్రోత్రాయ కవచాయహుం, ధియోయోనఃజ్ఞానాత్మనే నేత్రాభ్యాంవషట్, ప్రచోదయాత్సర్వాత్మనేస్త్రాయఫట్, భూర్భువస్సువరోమితిదిగ్బన్ధః.

க. கரன்யாசஹ.—தத்ஸவிது ரங்குஷ்டாப்யாம் நமஹ வ. ரேண்யம் தர்ஜனீப்யாம் நமஹ, பர்கோதேவஸ்ய மத்யமாப்யாம் நமஹ, தீமஹி அனுமிகாப்யாம் நமஹ, தியோயோன: கனிஷ்டிகாப்யாம் நமஹ, ப்ரசோதயாத் கரதல கரப்ருஷ்டாப்யாம் நமஹ.

உ. ஹ்ருதயன்யாஸஹ.—தத்ஸவிதுர் ப்ரம்ஹாத்மனே ஹ்ருதயாயநமஹ, வரேண்யம் விஷ்ணுவாத்மனே சிரஸே ஸ்வாஹா, பர்கோதேவஸ்ய ருத்ராத்மனே ஷிகாயைவஷட் தீமஹி ஸத்யாத்மனே ஸ்ரோத்ராய கவசாயஹும் தியோயோன: ஞானாத்மனே நேத்ராப்யாம் வஷட், ப்ரசோதயாத் ஸர்வாத்மனே ஸ்த்ராயபட், பூர் புவஸ் ஸுவரோமிதி திக்பந்தஹ.

ముక్తావిద్రుమహేమనీలధవళ చ్ఛాయైర్ముఖైస్త్రీక్షణైః - యుక్తామిన్దునిబద్ధరత్నమకుటాం తత్వార్థవర్ణాత్మికాం - గాయత్రీంవరదాభయాఙ్కుశకశాశ్శుభ్రం కపాలంగదాం- శఙ్ఖంచక్రమథారవిన్దయుగళంహస్తైర్వహన్తీం భజే.

காயத்ரியின் தியான சுலோகம்.—முக்தாவித்ரும ஹேமநீலதவளச் சாயைர்முகைஸ்த்ரீக்ஷணை:—யுக்தாமிந்து நிபத்த ரத்னமகுடாம் தத்வார்த்த வர்ணாத்மிகாம்—காயத்ரீம் வரதா பயாங்குச கஸாஸ் ஸுப்ரம் கபாலம்கதாம்—ஸங்கம் சக்ரமதாரவிந்த யுகளம் ஹஸ்தைர் வஹந்திப்பஜே.

ஜெபம்.—ஜெபமென்பது அவரவருடைய வல்லமை (பிரியம்) க்குத்தக்கவளவு முறை காயத்ரியை தியானஞ் செய்தலாம். (உருவேற்றுதலாம்.)

శ్రౌతాచమనంకృత్వా ప్రాణానాయమ్యాఙ్గన్యాసాదికంధ్యానంచకృత్వా.

ஸ்ரௌதாசமனம் க்ருத்வா ப்ராணாயம்யாங்கநியாஸாதிகம் தியானஞ்ச க்ருத்வா.

இரண்டாம் பாகம் முற்றிற்று.

M. M.

—o—

வர்த்தமானசங்கிரகம்.

டங்காரிட்டாவிலே சென்றமீ 31௳ காலை 9மணிக்கு பிரான்சு கப்பலொன்று வந்து சேர்ந்து, இரண்டுபடகிலே ஆயுதபாணிகள் வந்திறங்கி, பிரான்சுகொடி ஏற்றி மங்களவெடி தீர்த்தார்கள். இதைக் கேட்டமாத்திரத்தில், கடற்கரையிலுள்ள சோமாலிசாதியார் கலங்கி, ஒட்டகசவாரிக்காரர்களும் குதிரைசவாரிக்காரர்களும் கால்நடைக்காரர்களுமாய் ஓடிவந்து கண்ணுக்கெட்டும் வரையில் நிறைந்துவிட்டார்கள். அவர்களுள் மூன்று சுல்த்தான்களும் அநேக தலைவர்களும் பெரிய தனக்காரர்களும் வந்திருந்தார்கள். இங்கிலீஷ் கொடியில்லாமையைக்கண்டு ஜனங்கள் சற்று பிரமித்தார்கள்.

அவ்விடத்திய விசாரணைத்தலைவராகிய அசிஸ்டாண்டு பொலிட்டிக்கல் ரிசிடெண்டை ஏற்றிக்கொண்டு, மறுநாள் உதயத்தில் புல்தார்பிரதேசத்திலிருந்து இங்கிலீஷ் கப்பல் வந்து சேர்ந்தது. டங்காரிட்டாவிலே இங்கிலீஷ்கார் சவரட்சணார்த்தமாக துரைத்தனம் ஸ்தாபித்திருக்கிறபடியால், பிரெஞ்சுகொடி போடுவது (இங்கிலீஷ்காரருக்கும் பிரெஞ்சுக்காரருக்கு முண்டாயிருக்கிற) இன்டர்நாஷனல் சட்டத்துக்கு விரோதமென்று அந்தரிசிடெண்டு ஆட்சேபித்து, பிரஞ்சுகொடிக்குக்கிழக்கே 800 கஜதூரத்தில் இங்கிலீஷ் கொடி போட்டனர்.

பிரெஞ்சுக்கப்பற்றலைவர் கரைக்குவந்து, சோமாலிசாதித்தலைவர்களைச் சேர்த்து ஒரு கூட்டங் கூட்டி ஆலோசனைசெய்ததில், பொலிட்டிகல் ஏஜெண்டினுடைய ஆக்ஷேபனை நிமித்தமில்லையென்றும், பிரெஞ்சுக்கொடிதான் பறக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். பிரிட்டிஷ் ஏஜெண்டும் தமது கொள்கையை நிலைநாட்டத் தீர்மானித்தார். அன்று சாயங்காலம் பிரெஞ்சுகப்பல் ஒபாச்சுக்கும், இங்கிலீஷ்கப்பல் ஜீலாவுக்கும் போய்விட்டன. நாளதுமீ 3௳ இங்கிலீஷ்கப்பலில் இருபது இஜிப்ஷன் துருப்புகள் வந்து, இங்கிலீஷ் கொடிமரத்தைச் சுற்றிலுமிறங்கியிருக்கின்றன.

டங்காரிட்டாவுக்கு நூறுமயல்தூரத்திலிருக்கிற ஹாராருக்கு பிரான்சியர்கள் ரெயில்வேபோட எத்தனிப்பதாகவும், சோமாலிசாதியார் எந்தப்பட்சத்தில் தங்களுக்கு அதிக பிரயோசனங்கிடைக்குமோ அந்தப்பட்சத்தில் சேருவார்களென்றும் வதந்தி.—(**பாம்பேகேஜெட்.**)

சிலோனிலுள்ளவர்கள் இந்தியாவிலுள்ளவர்களைப்போல ஜூபிலி உற்சவத்தை சென்றமீ 16௳ நடத்தாமல், மற்ற நாடுகளொப்பந்தம் ஜூன்மீ 20௳ நடத்த உத்தேசித்திருக்கிறார்கள்.

பாம்பே பிரிசிடென்சி அசோசியேஷன் என்னுஞ் சபையில், உயர்ந்த படிப்பைக்குறித்து கவரன்மெண்டார் செய்திருக்கிற ஏற்பாட்டை மறுக்க விண்ணப்பங் கொடுத்துக்கொள்ளும்படி தீர்மானஞ்செய்யப்பட்டிருக்கிறது. சென்னை ராச்சியத்திலுள்ளோர் பெரும்பாலார் கடன்வாங்கியாவது ஜம்பமாகக் கலியாணஞ்செய்வதுபோன்ற டம்பத்திற்கு முந்துவார்கள்.

நீராவி எந்திரத்தினிமித்தம் நிலக்கரிக்குவதிலாக மிதச்செலவுள்ள தகுதியான புது எரிப்புவஸ்து ஒன்று நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு ஆகாரம் தார்த்தைலமும் அதி உஷ்ணமான நீராவியும் கலப்பதே. இதனாலே நூற்றுக்கு முப்பதுவீதம் கூடிவருமாம்.

கல்கத்தாவிலே செய்யப்பட்ட ஜூபிலி பாணவேடிக்கையில் மூன்று பெரிய ஆகாயகூண்டுகள் விடப்பட்டன; அவற்றிலொன்று கல்கத்தாவுக்கு வெளியில் பன்னிரண்டு மயல்தூரத்தில் வாசஞ்செய்கிற சுதேசியாகிய தானிய வியாபாரியின் விழற்கூறைவீட்டின்மேல் விழுந்தது. அந்த உரத்த சத்தத்தைக் கேட்டு வீட்டுக்காரன் வெளியில்வந்து, தன் குடிசையின்மேல் கூண்டுபற்றி எரிகிறதைக்கண்டு அதை எடுத்துப்போடப்பார்த்தான்: ஆனால் அவன் அப்படிச் செய்வதற்கு முன்னமே, தீயானது குடிசை முழுவதும்பறவி, பின்னும் பதினாறு குடிசைகளையும் அவற்றிலுள்ள மிக்க தானியங்களையும் நாசஞ் செய்தது. சுமார் இரண்டாயிரம் ரூபாய் நஷ்டம். பிராணச்சேதமில்லை. அந்த கூண்டில் தொங்கக்கட்டியிருந்த ஒரு துண்டுகடுதாசியிலே, இதைக் கண்டெடுக்கிறவர்கள் தயவு செய்து பாணக்காரர்களிடத்திலே ஒப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0
ஷை	3-க்கு	0	10	0
ஷை	6-க்கு	1	2	0

முன்பணஞ்செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலுமுள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்திற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத்தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில் பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும்பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.